**அட்டாளைச்சேனை பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும்

அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளம் மற்றும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளின் கூட்டு மொத்தத் தொகை ரூபா 2,780,964 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இவ் வருடம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்படி விடயம் சீராக்கம் செய்யப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் வேலைகள் பூர்த்தியான ரூபா 9,862,329 பெறுமதியான 02 நிர்மாணங்களின் பெறுமதிகள் மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மோட்டர் கிறேடர் மற்றும் ரோலர் ஆகியவைகள் வாடகைக்கு வழங்கியமை தொடர்பில் மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய ரூபா 226,790 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனங்களை மிகைத்த வருமானம் ரூபா 8,091,768 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனங்களை மிகைத்த வருமானம் ரூபா 13,654,109 ஆகும்.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டு காலப்பகுதிக்குரிய ரூபா 11,743,147 தொகையான முத்திரை கட்டணம் திசெம்பர் மாதத்தில் நேரடி வைப்பாக கிடைக்கப்பெற்றிருந்தும் இத் தொகை காசேட்டில் சீராக்கப்படாது இனங்காணப்படாத பெறுவனவாக வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | விபரமான தெளிவின்மை காரணமாக மீளாய்வாண்டில் சீராக்கம் செய்ய முடியாதுள்ளதுடன் 2023.01.01 ஆந் திகதி வருமானமாக எடுக்கப்பட்டுள்ளது. | நேரடி வைப்பாக கிடைக்கப் பெற்ற தொகையினை காசேட்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 350,000 | 146,200 | 146,200 | - | 800,000 | 130,380 | 130,380 | - |
| (ii) | வாடகை | 11,960,000 | 9,954,669 | 8,583,869 | 1,370,800 | 2,860,000 | 7,714,108 | 7,709,358 | 394,050 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,542,000 | 757,475 | 757,475 | - | 1,592,000 | 866,200 | 866,200 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 15,930,000 | 15,769,748 | 13,698,423 | 2,071,324 | 23,280,000 | 6,940,665 | 16,982,639 | 801,840 |
| (v) | கூட்டுத் தொகை | 29,782,000 | 26,628,092 | 23,185,967 | 3,442,124 | 28,532,000 | 15,651,353 | 25,688,577 | 1,195,890 |

#### 2.3.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கலிலிருந்து பெறவேண்டிய ரூபா 1,169,750 தொகையாக இருந்தது. அதில் ரூபா 273,300 தொகை 07 வருடங்களிற்கு மேற்பட்ட நிலுவையாக உள்ளது. | நிலுவையினை செலுத்தாத நபர்களை அடையாளம் காண முடியாமையினால் அதனை பதிவழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய நிலுவை வருமானங்களினை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம்** | | |
| | மீளாய்வாண்டில் சபையின் அதிகார பிரதேசத்தில் வியாபார அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படாத 1,043 கடைகளுக்கு அனுமதி பத்திரம் வழங்குவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அலுவலக உத்தியோகத்தர்களினால் நடமாடும் சேவை மூலம் இச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. | வியாபார அனுமதிப் பத்திரங்களினை வழங்கி வருமானங்களினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| | மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் பெறவேண்டியதாக உள்ள நீதிமன்ற தண்டம் ரூபா 8,385,400 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா1,583,267 தொகை காணப்பட்டிருந்தது. | நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அறவிட வேண்டிய வருமானங்களினை மிக விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இரண்டு மாநகர சபைகள் மற்றும் 04 பிரதேச சபைகளின் திண்மக்கழிவுகளை ஏற்கும் சபையின் பிரதான திண்மக்கழிவு நிலையத்தில் காணப்படும் நிறையிடல் உபகரணம் மூன்று வருடங்களாக மின்னல் தாக்கத்திற்குட்பட்டு பழுதடைந்து காணப்பட்டிருந்தும், இதனை திருத்தம் செய்வதற்கும் எதிர்காலத்தில் மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கான நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழுதடைந்துள்ள நிறையிடல் உபகரணத்தினை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொளளப்படுகின்றது. | நிறையிடல் உபகரணத்தினை மிக விரைவாக திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நான்கு வருடங்களுக்கு மேலாக விளைவற்றுக் காணப்படும் ரூபா 1,293,948 கூட்டுப் பெறுமதிகளினைக் கொண்ட இரண்டு வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகளினை வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைக் கணக்கிலுள்ள மீதிகளினை வருமானம் உழைக்கும் மூலங்களில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 33 காணிகள் மற்றும் 31 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சொத்துக்களின் பெறுமதிகளை கணிப்பிட்டு கணக்கீடு செய்தலை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதி வரை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடமிருந்து நீரிணைப்பினைப் பெற்றுக்கொள்வதற்காக சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 386 பயனாளிகளினால் வெட்டப்பட்ட கொங்கிரீட், மற்றும் தார் வீதிகளினை மீள்சீரமைப்பதற்காக ரூபா 810,000 தொகை வைப்பாக அறவிடப்பட்டிருந்தும், அவ் வீதிகள் கணக்காய்வுத் திகதி வரைக்கும் பயனாளிகளினால் மீள்சீரமைக்கப்பட்டு வைப்புத் தொகை மீளளிக்கவோ அல்லது அவ் நிதியை கொண்டு சபை மறுசீரமைக்கவோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வைப்புத் தொகைகள் மீள பயனாளிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நீரிணைப்பினை பெற்றுக் கொள்வதற்காக வெட்டப்பட்ட வீதிகளினை மீள் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 957,996 தொகையான திண்மக்கழிவகற்றல் நிலநிரப்பு கட்டண நிலுவையினை காரைதீவு பிரதேச சபையிடமிருந்து சட்ட நடவடிக்கை மூலம் அறவிடுவதற்கு 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுச் சபையின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரைக்கும் அவ் நிலுவைத் தொகையினை சட்ட நடவடிக்கை மூலம் அல்லது அச்சபையின் நிதி நிலமைக்கேற்ப பகுதி பகுதியாகவோ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்யப்படாத நிலுவைத் தொகைகளினை விரைவில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | அறவீடு செய்யப்படாத நிலுவைத் தொகைகளினை விரைவில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1,400,000 நிதியைப் பயன்படுத்தி பள்ளக்காடு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த விலங்குகளின் எலும்புகளை அரைக்கும் நிலையத்தினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் முறையான ஒப்பந்தத்திற்கு இதுவரை வரவில்லை. | விலங்குகளின் எலும்புகளை அரைக்கும் நிலையத்தினை மிக விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 13 வாகனங்களை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை திருத்தம் செய்வதற்கும் மற்றும் அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனங்களை திருத்தம் செய்து மீளப் பயன்படுத்துவதற்கு அல்லது அதனை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை சிறுவர் விளையாட்டு பூங்காவில் காணப்படும் விளையாட்டு உபகரணங்கள் போதியளவான பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமையினால் சில சேதமடைந்தும் மற்றும் துருப்பிடித்தும் காணப்பட்டிருந்தன. அவைகளை பாதுகாக்க உரிய நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்காமையினால் எதிர்காலத்தில் அவைகள் முற்றாக இழக்கப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக காணப்படுவதுடன், அப்பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கான விளையாட்டு பூங்காவினை இழக்கவேண்டிய நிலையும் ஏற்படும். | தற்போது திருத்தம் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விளையாட்டு பூங்காவில் போதியளவான பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வேறு அமைச்சுக்களிடமிருந்து நன்கொடையாக பெறப்பட்ட 07 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக்கொள்வதற்கு எந்தவொரு தொடர் நடவடிக்கைகளும் மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்குறிப்பிடப்பட்ட வாகனங்களுக்காக கணிசமான சுங்கத் தீர்வை செலுத்த வேண்டியுள்ளமையினால் உரிமை மாற்றம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையினால் பெறுகைத்திட்டம் இன்றி விருப்பத்திற்கமைய கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையினால் பெறுகைகள் தொடர்பில் வழங்குனர்களுக்கு மேலதிகமாக ரூபா 243,600 தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணத்தினால் பெறுகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த முடியாமலிருந்தது. | முறையான பெறுகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்து வதினுடாக பெறுகை நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். |

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| சபையில் கடன்பெற்று இறந்த, ஓய்வுபெற்ற மற்றும் பதவி விட்டுச்சென்ற 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 218,772 கடன் நிலுவையினை உரியவரிடமிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலுவைத் தொகையினை உரியவரிடமிருந்து அல்லது பிணையாளியிட மிருந்து அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான தீர்மானத்தினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

## 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக்கிணங்க அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய 100 தொழில் நிறுவனங்கள் காணப்பட்டிருந்தும் அதில் 32 தொழில் நிறுவனங்களின் காலாவதியான அனுமதிப் பத்திரங்களினை புதுப்பிப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. | 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் மற்றும் அதன் கீழ் அமுலாகும் பிரமாணங்களுக் கிணங்க அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |